

# காந்திநிகேதன் குரல்

# Voice of Gandhiniketan



## 2015–2016 வைர விழா ஆண்டு




SMART Class LAB



## உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ

Activity Based Learning





வாய்மையே வெல்லும்



# VOICE OF GANDHINIKETAN
# E MAGAZINE

**Patron**
**Prof.R.Venkataswami**
President
Gandhiniketan Ashram

**Advisors**
**Mrs.V.Radha**
Secretary, GNA

**Mr.G.Muthuramalingam**
Headmaster, GNGVHSS

**Mrs.R.Parimala**
Headmistress, GNGVPS

**Editorial Board**

**Chairman & Hon.Editor**
**Prof .Dr.V.Ragupathi**
Member GNA

**Executive Editor Members**

Mr.M.Nagarajan
Head office

Mr.T.Rajkumar
BT Teacher

Mr.G.Thangamudi
Tamil Pandit

Mr.M.Muthukumar
Computer Instructor

Ms.Saroja
Sec.Gr. Teacher

Ms.Vanitha
Sec.Gr. Teacher

**Designer**
Mr.M.Muthukumar
Computer Instructor

# ஆசிரியர் குரல்

## தலையங்கம்

"இந்தியா அதன் ஏழு இலட்சம் கிராமங்களில் வாழ்கிறது" - என்ற மகாத்மா காந்தியடிகளின் கூற்றிற்கிணங்க, கிராம மக்களின் முழுமையான வளர்ச்சிக்கு சேவை புரிதல், மாணவர்களுக்கும் கிராமப்புற இளைஞர்களுக்கும் தொழில் கற்றுத் தந்து வாழ்வாதாரம் அளித்தல் போன்ற உயரிய நோக்கங்களோடு 1940 ஆம் ஆண்டு காந்திநிகேதன் ஆசிரமம் கிராம சுயராஜ்ஜியத்திற்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த காந்தியத் தொண்டர் அமரர் கோ.வேங்கடாசலபதி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. தனது சேவையில் இந்த வருடம் வைரவிழா ஆண்டாக (75வது வருடம்) பணிகளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

காந்திநிகேதன் தன் தொடக்க காலத்திலிருந்தே சுற்று வட்டார மக்களுக்கு லாப நோக்கமின்றி வேலை வாய்ப்பு மற்றும் அவர்களுக்குத் தேவையான பொருட்களை அவர்களே உற்பத்தி செய்யும் விதத்தில் உற்பத்தி நிலையமாகவும், பயிற்சி நிலையமாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், பூர்வாதாரம் முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை சுமார் 2500 மாணவ, மாணவியருக்கு காந்தியடிகள் மிகவும் விரும்பிய எந்த வேலையும் இழிவல்ல என்ற எண்ணத்தை மாணவர்களிடம் ஏற்படுத்தும் விதத்தில் ஒழுக்கத்துடன் கூடிய தரமான கல்வியையும் வழங்கிக் கொண்டிருக்கிறது.

வைரவிழா ஆண்டினை சிறப்பிக்கும் பொருட்டு நமது ஆசிரமத்தின் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் வேண்டுகோளுக்கிணங்க இந்த மின் புத்தகத்தில் (E-Magazine) முழுவதுமாக தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், பயிற்சி ஆசிரியைகள், தொடக்கப்பள்ளி மாணவர்களின் படைப்புகள் மட்டுமே இடம்பெறும் சிறப்பிதழாக வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம். வைரவிழா ஆண்டின் முக்கிய நிகழ்வுகளையும் இதிலே இடம்பெறச்செய்துள்ளோம். காந்திநிகேதன் ஆசிரமம் தனது பணிகளை தொய்வின்றி நிறுவனர் ஐயா அவர்களின் குறிக்கோள்களை சுமந்து கொண்டு அவர்கள் காட்டிய பாதையிலே தனது பயணத்தை தற்போது பேராசிரியர் டாக்டர் வேங்கடசாமி ஐயா அவர்கள் தலைமையில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த ஆண்டில் குறிப்பிடத் தக்க நிகழ்வாக நமது ஆசிரமத் தலைவர் பேராசிரியர் டாக்டர் வேங்கடசாமி ஐயா அவர்களின் சிறப்பான சேவையைப் பாராட்டி தமிழக அரசு "பெருந்தலைவர் காமராசர் விருது-2016" வழங்கி கவுரவப்படுத்தியது ஆசிரம சமுதாயத்தினரை ஒட்டுமொத்தமாக மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. இந்த வருடம் இந்த விருது கிடைத்தது வைரவிழா ஆண்டில் ஒரு மகுடம் வைத்தாற்போல் அமைந்துள்ளது. மேலும் நகர்ப்புற பள்ளிகளில் கூட கிடைக்காத வசதிகளை நமது பள்ளி மாணவர்களுக்கு

ஏற்படுத்தி தறுவதில் நமது நிர்வாகம் சற்றும் தயங்காமல் மாணவர்கள் நலனுக்கு முக்கியத்துவம் அளித்து உடனடியாக செயல்படுத்தி வருகிறது. அந்த வரிசையில் இந்த ஆண்டு ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு ஸ்மார்ட் கிளாஸ் ஆய்வகத்தினை(Smart Class lab) ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டுத்துறையில் தனி கவனம் செலுத்தி வரும் நமது ஆசிரம நிர்வாகம் பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி மாணவர்கள் பலர் மாநில அளவில் வெற்றிகளை குவித்திட வழிவகை செய்துள்ளது. இந்த ஆண்டில் புதிதாக உள் விளையாட்டரங்க விளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில் டேபிள் டென்னிஸ் விளையாட்டரங்கம் அமைத்துக் கொடுத்துள்ளது. மேலும் சிறப்பானதொரு கூடைபந்து மைதானத்தைக் கொண்டுள்ள நமது பள்ளியில் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்காக மற்றொரு பயிற்சி கூடைப்பந்து மைதானத்தையும் அமைக்க நமது நிர்வாகம் அனுமதி அளித்து அதற்கான ஆரம்பகட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வைரவிழா ஆண்டில் மற்றொரு புதிய வரவாக மர பர்னிச்சர் பகுதி ஆரம்பிக்கப்பட்டு தரமான மர பர்னிச்சர் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

காந்திநிகேதனைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு ஆண்டும் நூற்றாண்டுதான். இருப்பினும் கடந்து வந்த பாதைகளை, கடினங்களை மறப்பதற்கில்லை. நல்லவற்றை எடுத்துக் கொண்டு தீயவற்றை புறந்தள்ளி தனது லட்சிய பயணத்தை தொடரும்.

-நன்றியுடன் ஆசிரியர் குழு

## An ideal Teacher

Mrs.R.Parimala
Headmistress

From very ancient times teachers have been honored as builders of the nation. Plato and Aristotle in Greece vashishta and vishwamitra in India enjoyed a status next only to kings and princess.

Teachers are the salt of the earth when teachers grow weak or corrupt, that means the utter ruin of society. They are the lamps that shatter darkness, the light houses that guide the wandering ships and deep it away from dangerous rocks.

An ideal teacher is, in the first place, the master of his subject. He spends his days in the pursuit of studies. He reads journals and magazines which keep him well informed and up to date. A library is like a temple to him .he is regular and punctual. He is simple in his habits.

**Teachers are like fathers or mothers to them (children)**



காந்திநிகேதன் தன் தொடக்க காலத்திலிருந்தே சுற்று வட்டார மக்களுக்கு லாப நோக்கமின்றி வேலை வாய்ப்பு மற்றும் அவர்களுக்குத் தேவையான பொருட்களை அவர்களே உற்பத்தி செய்யும் விதத்தில் உற்பத்தி நிலையமாகவும், பயிற்சி நிலையமாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கால மாற்றம் மற்றும் மக்களின் தேவைக்கேற்ப இன்றளவில் 1. தோல் பொருட்கள் மற்றும் ரெக்சின் பொருட்கள் உற்பத்தி 2. கதர் ரகங்கள் விற்பனை 3. குளியல் சோப், சலவை பவுடர் தயாரித்தல் 4. மர சாமான்கள் உற்பத்தி 5. ஸடீல் பொருட்கள் உற்பத்தி 6. மண்புழு உரம் போன்றவை சுற்றுப்புற கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் தரமானவையாக தயாரிக்கப்பட்டு விற்கப்படுகிறது.

## நான் கண்ட மகாத்மா

திருமதி.கோ.விஜயராணி
உதவி ஆசிரியை

உலக நாடுகளுக்கான ஒட்டுமொத்த ஆன்மிகத் தேடலும், அருட்கொடையும் நிரம்பியது நமது பாரத தேசம். இங்கு தோன்றிய ஆன்மிக அருளாளர்களின் எண்ணிக்கை அளப்பரியது.



அந்த வரிசையில் இந்த நூற்றாண்டின் முதற்பாதியை ஆட்கொண்டவர் நமது தேசப்பிதா "மகாத்மா காந்தி" என்றால் அது மிகையன்று ஆன்மிக வழியில் அரசியலை இணைத்து அரசியலிலும் புனிதத்தை நிலைநாட்ட முடியும் என்று நிரூபித்துக்காட்டியவர் அவர்.

"மகாத்மா காந்தி" என்றவுடன் நமக்கு நினைவுக்கு வருவது "அடிமைப்பட்டுக்கிடந்த இந்தியாவுக்கு அவர் பெற்றுத்தந்த சுதந்திரம்" தான்.

அடிமை வாழ் வகன்றி நாட்டார்
விடுதலை யார்ந்து செல்வம், குடிமையிலுயர்வு
ஞானமும் கல்வி யோங்கிப் படிமிசைத்
தலைமையெய்தும் படிக்கொரு சூழ்ச்சிசெய்தாய்
முடிவிலாக் கீர்த்திபெற்றாய் புவிக்குள்ளே
முதன்மையுற்றாய் என்றுதான் பாரதியும்

அவரை முதலில் அடையாளம் காட்டுகிறான்.

ஆனால் மகாத்மாவோ தன்னை ஒரு அரசியல் வாதியாகவோ, விடுதலைப்போராட்டத் தலைவராகவோ, சமூக மாற்றத்திற்கு வழியமைத்திடும் விற்பனையாளராகவோ சொல்லிக் கொள்ளவில்லை. மேற்சொன்ன அனைத்திலும் அவர் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராக விளங்கிய போதிலும் அவர் தன்னை ஒரு முழுமையான ஆன்மிக வாதியாக அடையாளம் காட்டவே விரும்புகிறார்.

ராஜீயத்துறையின் மூலம் இந்தியாவாலும் உலகத்தாலும் அறியப்பட்டு, “மகாத்மா” என்ற பட்டத்தையும் பெற்றிருக்கும் தான் அந்தப் பட்டத்தினால் எந்தச் சமயத்திலும் பரவசம் அடைந்ததில்லை என்றும், மாறாக ஆன்மிக துறையில் தான் நடத்திய சோதனைகளின் மூலம் ராஜீயத்துறையில் வேலை செய்வதற்கான சக்தியைப் பெற்றதாகவும் கூறுகிறார். நான் விரும்புவதும் இத்தனை ஆண்டுகளாக நான் பாடுபட்டு வந்திருப்பதும், ஏங்கியதும் என்னை நானே அறியவேண்டும். என்பதற்கும் கடவுளை நேருக்கு நேராகக் காண வேண்டும் என்பதற்கும், மோட்சத்தை அடையவேண்டும் என்பதற்குமே நான் பேசுவன, எழுதுவன, ராஜீயத்துறையில் முயற்சி செய்வன ஆகிய யாவும் இக்குறிக்கோளைக் கொண்டவையே என்பது அவரின் தன்னிலை விளக்கம். ஆன்மிக இலட்சியத்தின் ஒரு இலக்காக நினைத்தே பாழ்பட்ட இந்திய அரசியலில் மஹாத்மா தன்னை இனைத்து கொண்டார் என்பதை

தன்னுயிர் போல தன்கழிவெண்ணு<br>
பிறலுயிர் தன்னையும் தன்னையும் கணித்தல்<br>
மன்னுயிரெல்லாம் கடவுளின் வடிவம்<br>
கடவுளின் மக்களென்றுணர்தல்<br>
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை மற்றாங்கு<br>
இழிபடு போர் கொலை தண்டம்<br>
பின்னியே கிடக்கும் அரசிய லதனில்<br>
பிணைத்திடத் துணிந்தனை பெருமான்

என்று பாரதியும் தனது பிறிதொரு பாடலில் குறிப்பிடுகிறார்.

ஆன்மிகம் என்பது கடவுளை அடையும் மார்க்கம், அது தொய்வில்லாத பிரார்த்தனை, பக்தி துறவறம், சந்நியாசம், வானப்பிரஸ்தம் போன்ற கடினமான நடவடிக்கைகளுக்கு உட்பட்டது என்று அறியப்பட்ட காலத்தில் - ஆன்மிகம் என்பது சாத்தியமே, சத்தியம் என்பது உண்மைபேசுவதும், உள்ளத்தில் உண்மையோடு இருப்பதுமே, கடவுள் என்பவர் சத்திய சொரூபியே என்பதை தனது வாழ்நாள் முழுவதும் தனது எண்ணத்தாலும் சொல்லாலும் செயல்களாலும் நிலை நாட்டியவர் மகாத்மா காந்தி ஆவார்.

இந்த நடவடிக்கைகள் மூலம் சுத்த சத்தியமாக கடவுளின் மங்கலாள தோற்றங்களைத்தான் அடிக்கடி காண்பதாகவும், தனக்குச் சாத்தியமான இது மற்றவர்களுக்கம் சாத்தியமானதே என்றும், சத்தியத்தை அடைவதற்கான சாதனங்கள் எப்படிக் கஷ்டமானவையோ அப்படி எளிமை யானவையும் கூட என்றும், கபடமற்ற குழந்தை உள்ளமும், அகங்காரம் இல்லாத முழுமையான பணிவுமே சத்தியத்தேடலுக்கு இன்றியமையாதது என்றும் நமக்கு அவர் தெளிவுபடுத்துகிறார்.

இந்நாளில் அந்த உத்தமரின் வாழ்க்கையும், வாழ்வையும் நினைவு கூர்வதோடு நின்று விடாமல் அவரின் அடியொற்றி நடக்க முயற்சிப்பதன் மூலம் நம்மை கடவுளின் கருணைப் பார்வைக்கு உட்படுத்துவோமாக....



எமது ஆரம்பப் பள்ளி மாணவர்கள் நடத்திய பள்ளியாளு மன்றம் (மாதிரி பாராளுமன்றம்)

# சிறு தானிய உணவு - பாடல்

திருமதி.எம்.விஜயா
உதவி ஆசிரியை

சாப்பிடுங்க சாப்பிடுங்க சிறு தானியங்கள் சாப்பிடுங்க
பண்பாட்டு உணவு நீங்க நல்லா சாப்பிடுங்க
பாரினிலே நோயில்லாம நல்லா வாழ்ந்திடுங்க
கொழுப்பைக் கரைத்திடும்
உடல் பருமனைக் குறைத்திடும்
ஜீரண சத்தியை கூட்டும் கம்பு சாப்பிடுங்க
கட்டான உடலோடு தெம்பாய் வாழ்ந்திடுங்க
வயிற்றுப் புண்ணை நீக்கிவிடும்
வாய்நாற்றத்தை போக்கிவிடும்
வலிமையை அதிகரிக்கும் சோயம் சாப்பிடுங்க
சோம்பலை நீக்கி சுறுசுறுப்பாய் நீங்க வாழ்ந்திடுங்க
(சாப்பிடுங்க சாப்பிடுங்க)
குண்டான உடம்பையும் ஒல்லியாய் ஆக்கிவிடும்
சுண்ணாம்பு சத்துமிகுந்த வரகு சாப்பிடுங்க
உடம்பு வலிமையாகும் பிறகு பாருங்க
மலச்சிக்கல் போக்கிவிடும் சர்க்கரைக்கு தீர்வுதரும்
நார்சத்து மிகுந்த உணவு சாமை சாப்பிடுங்க
ஆமைபோல் நீண்ட நாட்கள் நீங்களும்
வாழ்ந்திடுங்க
வந்த நோயை போக்கிவிடும் சுரம் கூட ஓடிவிடும்
பசியினை தூண்டிவிடும் தினையை சாப்பிடுங்க
பிணிகள் எதுவும் வராமேலே பத்திரமாய்
இருந்திடுங்க
மூட்டுவலி உள்ளோருக்கும் பல்லோட உறுதிக்கும்
இரும்புச்சத்துள்ள குதிரைவாலி தினமும் சாப்பிடுங்க
மண்மணக்கும் உணவு முறையை மறந்துடாதீங்க
(சாப்பிடுங்க சாப்பிடுங்க)

# நேர்மறை எண்ணங்கள்

திருமதி கே. வனிதா
உதவி ஆசிரியை

A pessimist sees,
"The difficulty in every opportunity
An optimist sees,
The opportunity in every difficulty."
- Winston Churchill

மகிழ்ச்சி, ஆரோக்கியம் மற்றும் வெற்றிகரமான முடிவுகளை எதிர்பார்க்கும் ஒரு சிறந்த அணுகு முறையே நேர்மறை எண்ணங்கள்.

நாம் எல்லோரும் நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொண்டிருக்கிறோமா என்றால் பலரிடம் பதிலிருக்காது.

நேர்மறை எண்ணங்கள் நமது ஆயுள் காலத்தை அதிகரிக்க உதவும். துன்பங்களைத் தாங்கும் உந்து சக்தியை அளிக்கும்.

அதுமட்டுமல்ல, எந்த நிலையில் உள்ள ஒருவரையும் சாதனையாளராக மற்றும் மகத்தான சக்தி நேர்மறை எண்ணங்களுக்கு உண்டு.

இதற்கு, மிகச் சிறந்த சான்றாக தாமஸ் ஆல்வா எடிசனின் இளமைப் பருவத்து ஒரு நிகழ்ச்சியை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒரு நாள் பள்ளியிலிருந்து வந்த தாமஸ் ஆல்வா எடிசன், ஒரு கவரில் உள்ள கடிதத்தை தன் அம்மாவிடம் மட்டுமே கொடுக்க வேண்டும் என தன் ஆசிரியர் கூறியதாக சொல்லிக் கொடுத்தான். அந்த கடிதத்தை அந்த தாய் கண்ணீரோடு சத்தமாக தன் மகன் கேட்கும் படி இப்படி படித்தாள்.

"உங்கள் மகனின் அறிவுத்திறமைக்கு முன் எங்கள் பள்ளி மிகவும் சிறியது. அவனுக்கு கற்பிக்க திறமையான ஆசிரியர்கள் எங்களிடமில்லை. அதனால் தயவு செய்து நீங்களே உங்கள் மகனுக்கு கற்பிப்பது நல்லது."

பல ஆண்டுகளுக்குப்பிறகு எடிசனின் தாயரும் காலமாகி விட்டார். எடிசனும் அந்த நூற்றாண்டின் சிறந்த ஆராய்ச்சியாளராகவும், கண்டுபிடிப்பாளராகவும் ஆனார்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் தனது வீட்டின் பழைய சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்த போது அவர் தன் அம்மாவிடம் முன்பொரு முறை பள்ளியிலிருந்து கொண்டு வந்து கொடுத்த கடிதம் எதேச்சையாக கண்ணில் பட அதை எடுத்துப் படித்துப் பார்த்தார். அதில் இப்படி எழுதியிருந்தது,

"மூளை வளர்ச்சி குன்றிய உங்கள் மகனை இனிமேல் எங்கள் பள்ளிக்கு அனுப்ப வேண்டாம் என்று …..."

இதை படித்த எடிசன் கதறி அழுதார் பின் அவரது டைரியில் கீழ்க்கண்டவாறு எழுதினார்.

"மூளை வளர்ச்சியற்ற தாமஸ் ஆல்வா எடிசன் தனது தாயாராலேயே மாபெரும் கண்டுபிடிப்பாளனான் என்று"

நேர்மறை எண்ணங்கள் மிக உயரத்துக்கு நம்மைக் கொண்டு செல்லும் என்பதை எடிசனின் வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது.

ஆகவே ஆசிரியர் சமுதாயமாகிய நாம் நினைத்தால், நம்மாலும் பல எடிசன்களை உருவாக்க முடியும்.

அதனால் நம்மால் எதையும் செய்ய முடியும் என்ற நேர்மை எண்ணத்தை நாம் முதலில் உருவாக்கிக் கொண்டால் வெற்றி நிச்சயம்.

"Positive thinking leads to positive approach
Positive approach makes you a great achiever"
"Always be positive!"



25.12.2015 ஆம் நாளன்று கிருஸ்துமஸ் தின விழா கொண்டாடப் பட்டது. விழாவில் கிருஸ்துமஸ் தாத்தா வேடமணிந்த சிறுவன் ஆசிரியை ஒருவருக்கு கிருஸ்துமஸ் தின பரிசளித்தபோது எடுத்த படம்.

# அர்த்தங்கள் இரண்டு

R.உமா
உதவி ஆசிரியை

- வருவதும் போவதும் இரண்டு
  **இன்பம், துன்பம்**
- அட்டை போல் ஒட்டி கொள்வது இரண்டு
  **பழி, புகழ்**
- திரும்ப பெற முடியாதது இரண்டு
  **மானம், உயிர்**
- நாம் தேடுவது இரண்டு
  **பாவம், புண்ணியம்**
- நம்மை தேடி வருவது இரண்டு
  **இளமை, மூப்பு**
- பிறரை தன் வசம் ஈர்க்கக்கூடியது இரண்டு
  **பந்தம், பாசம்**
- அடக்க முடியாதது இரண்டு
  **ஆசை, துக்கம்**
- தவிர்க்க முடியாதது இரண்டு
  **பசி, தூக்கம்**
- பாதாளத்தில் தள்ளுவது இரண்டு
  **கோபம், பொறாமை**
- அனைவருக்கும் பொதுவாக அமைவது இரண்டு
  **பிறப்பு, இறப்பு**

ஆயுதங்களாலும், தகராறுகளாலும், வலிமையான உருவத்தாலும் ஒருவனை வீரனாகக் காட்டும் காலமெல்லாம் இப்போது இல்லை. உழைப்பால் தன் சொந்தக் காலில் நிற்கத் தெரிந்தவன், மனதில் உறுதி உடையவன், உண்மை பேசுபவன், பிறரை மதிக்கத் தெரிந்தவன் எவனோ அவனே உண்மையான வீரன்

## வெள்ளை சீனியை ஏன் பயன்படுத்தக் கூடாது?

பி.செல்லமுருகன் ஆசிரியர்

- கரும்பிலிருந்து சாறு பிழியப்படும் நிலையில் பிளிச்சிங் பவுடர் (or) குளோரின் எனப்படும் கெமிக்கலை புளுயுடு பாக்டீரியா கண்ட்ரோலாக பயன்படுத்துகிறார்கள்.
- பிழிந்த சாறு 60 சென்டிகிரேட் முதல் 70 சென்டி கிரேட் பாஸ்பாரிக் ஆசிட் லிட்டருக்கு 200 மில்லி வீதம் கலந்து சூடுபடுத்தப்படுகிறது.
- இதன் பிறகு சுண்ணாம்பை 0.2 சதவீதம் என்கிற அளவில் சேர்த்து சல்பர் - டை- ஆக்சைடு வாயு செலுத்துகிறார்கள்.
- 102 சென்டிகிரேட் கொதிகலனில் சூடுபடுத்தி நல்ல விட்டமின்கள் இழந்து செயற்கை சுண்ணாம்பு சத்து அளவுக்கு அதிகமாக சேர்ந்து விடுகிறது.
- அடுத்து பாலி பெக்ட்ரோலைட்டை சேர்த்து தெளிகலனில் மண், சக்கை போன்ற பொருள்களாக பிரித்து எடுக்கப்பட்டு தெளிந்த சாறு கிடைக்கிறது.
- சுடுகலனில் காஸ்டிக் சோடா, வாஷிங் சோடா சேர்த்து அடர்த்தி மிகுந்த 5ல் தயாரிக்கப்படுகிறது.
- மறுபடியும் சல்பர் டை ஆக்கைசடும் சோடியம் ஹைட்ரோ சப்பேட்டும் சேர்க்க படிக நிலைக்கு சீனியாக வருகிறது. சல்பர் டை ஆக்சைடு நஞ்சு சீனியில் கலந்து விடுகிறது.
- இப்படித் தயாரான சீனியில் எஞ்சி நிற்பது வெறும் கார்பன் என்றும் கரியே
- இப்படி தயாரான சீனியை 6 மாதத்திற்கு மேல் பயன்படுத்தக் கூடாது..
- ஆனால் வெல்லம், பனங்கட்டி, நாட்டுச் சர்க்கரையை எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம்.

## பயணிக்காத பயண நூல்

பரிசோதனைகள் துணிகரசெயல்கள், கண்டுபிடிப்புகள் நிறைந்த காலமாக பதினாராம் நூற்றாண்டு விளங்கியது.

இக்காலத்தில் ஆங்கிலேயரான, சிச்சர்ட் ஹக்லூயட் ஒரு புத்தகத்தை வெளியிட்டார். அவரின் “பிரதான கடல் யாத்திரை” பயணங்கள் கண்டுபிடிப்புகள் என்ற அந்த புத்தகம் பரிசோதனை முயற்சிகள். அதன் நுணுக்கங்கள் சம்பவங்களை தீரமாய் எதிர்கொள்ளல் உள்ளிட்ட பல தகவல்களையும் தந்தது.

புத்தகம் உடனடி வெற்றியை பெற்றது. கடற்பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொரு ஆராய்ச்சியாளரும், பயணியும் இப்புத்தகத்தை ஆலோசனைக்காக படித்த பின் பயணங்களை தொடங்கினார்.

ரிச்சர்ட்டையும் கண்டு அவரின் அறிவுரைகளையும் பெற்றனர். இது புது பயணிகளுக்கு மிகப் பெரிய உதவியை அளித்தாக அமைந்தது. ஆனால், இதில் வேடிக்கை என்னவென்றால் பயணநூலை எழுதிய ரிச்சர்ட் லண்டன், பிரிஸ்டல் மற்றும் பாரீஸை தாண்டி பயணித்ததே இல்லை.

அவருக்கு கடற்பயணங்களில் வெகு ஆர்வமுண்டு. பிரான்ஸிஸ் டிரேக் உள்ளிட்ட பல கடற்பயணிகளையும் ரிச்சர்ட் நட்பு கொண்டார். அவர்களிடம் விவரங்களை சாகசங்களை கேட்டறிந்தார். அவர்களின் அனுபவங்களை கிரகித்து கொண்டார்.

கடல் மற்றும் புதிய உலகின் கரைகளை பற்றி அறிந்தார். உலகின் மிகப்பெரிய சக்தியான அறிவைப் பயன்படுத்தி சாதனை படைத்தவர்களில் ரிச்சர்ட் ரிச்சானவர்தானே!

# காந்திநிகேதன் ஆசிரம வைர விழா ஆண்டு சிறப்புத் துளிகள்



இந்த ஆண்டு காந்திநிகேதன் ஆசிரமத்தின் வைரவிழா 2015-16 கொண்டாட்டத்திற்கு மகுடம் வைத்தாற்போல் தமிழ்நாடு அரசு பெருந்தலைவர் காமராசர் விருதினை 16.01.2016 அன்று பேராசிரியர் ரா.வேங்கடசாமி ஐயா அவர்களுக்கு அறிவித்து கவுரவித்தது.

16.01.2016 அன்று சென்னைப் பல்கலைக்கழக கலையரங்கில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு அரசு சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கையொப்பமிட்ட விருதுக்கான தகுதியுரை, ரூபாய் ஒரு லட்சம் ரொக்கம் மற்றும் தங்க பதக்கத்தை மாண்புமிகு நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் நமது காந்திநிகேதன் ஆசிரமத் தலைவர் பேராசிரியர் ரா.வேங்கடசாமி ஐயா அவர்களுக்கு வழங்கினார்.



காந்திநிகேதன் ஆசிரமத்தின் வைரவிழா ஆண்டை சிறப்பிக்கும் வகையில் 'கிராமப் பஞ்சாயத்துக்களும் முழு கிராம சுகாதாரத்தில் மக்கள் பங்கேற்பும்' என்ற கருத்தரங்கம் தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பஞ்சாயத்து தலைவர்களுக்கு 05.10.2015 நடத்தப்பட்டது.



காந்திநிகேதன் ஆசிரமத்தின் வைரவிழா ஆண்டை சிறப்பிக்கும் வகையில் முதல் நிகழ்வாக சுற்றுப்புற விவசாயிகளுக்கான இயற்கை வேளாண் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இதில் இயற்கை முறையில் விவசாயம் செய்வது தொடர்பாக பல்வேறு இயற்கை வேளாண் அறிஞர்கள் மூலம் விவசாயிகளுக்கு வழிகாட்டுதல்களும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.



புது வாழ்வு திட்டத்தின் சார்பில் நமது ஆசிரம ஆரம்ப பள்ளி வளாகத்தில் அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மன நோய் மற்றும் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான மருத்துவ முகாம் 27.05.2015 அன்று நடத்தப்பட்டது.

# கலாம்

வித்யா
ஆசிரியர் பயிற்சி மாணவி

ராமேஸ்வரம் எனும் ஊரில் கலாம் ஐயா பிறந்தாரே
நாட்டுக்காகத் தான் அவரைத் தந்தாரே
ஏழ்மையாய் பிறந்தாரே, திறமையாய் வளர்ந்தாரே
இன்று அவர் பிறந்த நாள் வாழ்த்துக்கள்
தெரிவிப்போம்
(இராமேஸ்வரம்)
விஞ்ஞானியாய் சென்று நடுவானிலே நின்று
ஆய்வு செய்தார் அன்று மறப்பதில்லை.
ரோஜா செடி போல நீ பூத்ததால் இன்று வளர்ச்சி
காண்கிறோம்
ஒரு பறவை மோதி கோபுரம் தான் சாய்ந்திடக்
கூடாதே
உங்கள் சாதனை படைப்பை ஒரு சொல்லால் கூறி
முடித்திட முடியாதே
தோழனே, தோழனே நீ இங்கு பிறந்ததால்
பெருமிதம் கொள்கிறோம்
நல் ஆசானை இன்று இழந்ததால் வேதனை
கொள்கிறோம்
(இராமேஸ்வரம்)
நதியென்று ஓர் நாள் கரையென்பதே சேரும்
எப்போதுமே ஓடும் நதியாகலாம்
புயல் வீசுமே நடுவானிலே நின்று திரைக்கட்டினால்
அது ஓய்வதில்லை
ஒரு உள்ளங்கையால் சூரியனை மறைத்திட முடியாதே
பறவைமோதி கோபுரம் தான் சாய்ந்திட கூடாதே
உன்னை யார் வெல்வது
இளைஞரின் சக்திதான் உங்களின் பேச்சுதான்
உங்களின் சாதனை எங்களைத் தூண்டுது
(இராமேஸ்வரம்)

# இயற்கை இனிது

– சோ.சரோஜா & பா.விமலா
உதவி ஆசிரியைகள்

விதையே,
நீ முளைப்பதற்கு முன் பூமிக்கு அடியில்,
நீ முளைத்தபின் பூமி உனக்கு அடியில்
ரோஜாவே,
நீ முள் செடியில் சிரித்தாய்
பிழியும் போது கண்ணீராய் பன்னீர் தந்தாய்
எத்தனை பேருக்கு இது தெரியும்
உன் வாசனையாலே அது புரியும்
மரமே,
பூமிக்கு நீயே உயிர் மூச்சு
நாளும் அதுவே பேச்சு
இன்னும் ஏனோ மக்கள் உனக்கு புதிராய்
புரியவைக்க புறப்படு புயலாய்
மனிதரின் மனதில் விதையாய்
மனிதனே!
இருப்பதை மறந்தாய்
புதிதாய் வந்ததை புகழ்ந்தாய்
அறியாத நோய்க்கு
ஆளாய் !
-மருத்துவமனையில்

## இமாலய மலை

கே.ஜெயந்தி ஆசிரியை

உலகின் மிகப்பெரிய மலை இமயமலை என்கிறோம். அதன் உயரம் பற்றி நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஆனால் இமயமலை எவ்வளவு பரந்து விரிந்தது என்பது உங்களுக்குத் தெரியுமா?

கிழக்கு மேற்காக சுமார் 2 ஆயிரத்து 500 கிலோ மீட்டரும், வடக்கு தெற்காக சுமார் 400 மீட்டரும் பரந்து விரிந்து கிடக்கிறது இமயமலை.

# யோகம் தரும் ‘ஹோமம்’

‘விண்ணேறு தப்பினாலும் கண்ணேறு தப்ப முடியாது’ – என்பது பழமொழி

பொதுவாக மனித உறுப்புகளில் மற்ற உறுப்புகள் எல்லாம் செயல்படும் பொழுதும் இயங்கும் பொழுதும் தான் பலன் கிடைக்கும் ஆனால் கண் மட்டும் பார்த்த உடனேயே பலன் கிடைக்கும். உழைக்கும் மற்ற உறுப்புகளைக் காட்டிலும் உட்கார்ந்த இடத்திலிருந்து பார்க்கும் பார்வைக்கு வலிமை மிக அதிகம். முற்காலத்தில் முனிவர்களும் ஞானிகளும் பார்த்த மாத்திரத்திலேயே பல சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். இவர்கள் கண் தீட்ஷை கொடுப்பது சாபம் கொடுப்பது எல்லாமே அவர்களுடைய கண் பார்வை திறமையால் தான்.

தவத்திற்கு இடையூறாக இருந்த கொக்கை பார்த்த மாத்திரத்தில் ‘கொங்கனவர்’ என்ற முனிவர் எரித்தார். அதனால் இவரைப் பார்த்து ஒரு சமயம் வாசுகி (திருவள்ளுவர் மனைவி) கொக்கென்று நினைத்தாயோ கொங்கனவா’ என்று கூறியிருக்கிறார்.

மஹாபாரதத்தில் பல நாட்களாக தன் கண்களை மூடி வைத்திருந்த ‘காந்தாரியின் பார்வை’யால் தன் புதல்வனின் உடலை ஒரு நொடி பார்த்த மாத்திரத்தில் வைரம் பாய்ந்த கட்டைபோல் மிகுந்த பலசாலியாக ‘துரியோதனன்’ திகழ்ந்தான்.

சிலர் பார்வை எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. பெருந்தன்மையான குணம் இல்லாதவர்களின் பார்வை மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது. விண்ணிலிருந்து வரும் மின்னல் சக்தியை விடக் கொடுமையானது இந்த கண் பார்வை. அதனால் தான் இப்படி பழமொழி கூறியிருக்கிறார்கள்.

பலரது ஏக்கம், அங்கலாய்த்தல், ஏக்கப் பெருமூச்சு போன்றவைதான் கண் திருஷ்டியாக மாறி நம்மைப் படாதபாடு படுத்துகிறது. இதற்குப் பரிகாரமாக கண்திருஷ்டி கயிறு என்று எவ்வளவோ செய்கிறார்கள், ஆனால் இவை எல்லாவற்றையும் விட மிகச் சிறந்தது. வீடுகளில், கோவில்களில் ‘ஹோமம்’ வளர்த்து வழிபடுவது தான் உத்தமம்.

ஒரு குடும்பத்தில் உள்ளவர்களின் ஜாதகங்களை அலசி ஆராய்ந்து. அவர்களது ராசி, நட்சத்திர அடிப்படையில் யோகபலம் பெற்ற நாளில், வீட்டில் எந்த இடத்தில், எந்த அமைப்பு ஹோமம் செய்தால் நமக்கு உடனடியாகப் பலன் தரும் என்பதைத் தேர்ந்தெடுத்து செய்யலாம் ஹோம வகைகள் பல அவை,

1. கணபதி ஹோமம்
2. சுதர்சன ஹோமம்
3. சரஸ்வதி ஹோமம்
4. தன்வந்திரி ஹோமம்
5. சண்டி ஹோமம் ….இப்படி பல ஹோமங்கள் உள்ளன.

இவற்றில் எது நமக்குச் சிறந்தது எனத் தேர்வு செய்துவீட்டிலோ, கோவில்களிலோ செய்யலாம் இதன் மூலம்

- வாழ்க்கையில் முன்னேற்றம்
- காரியத் தடைகள் விலகும்
- தடைப்பட்ட திருமணம் ஈடேறும்
- சகல சௌபாக்யம் ஏற்படுதல்

போன்ற நல்ல பலன்களை நாம் அடையலாம். இந்த ஹோமத்தை வீட்டில் செய்வதானால் அதிகாலை 4.30 AM to 6.00 AM பிரம்ம முகூர்த்தத்தில் செய்வது சிவபாக்கியம்.



14.11.2015 அன்று எம் பள்ளி வளாகத்தில் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது.

# அழியா கல்விச் செல்வம்

S.காவேரி, உதவி ஆசிரியை

**முன்னுரை**

நாம் கற்ற கல்வியானது. வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது வேந்தராலும் கொல்லத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவின்றிக் குறைவுறாது கள்ளர்க்கோ பயமில்லை. காவலுக்கோ மிக எளிது - இப்படிப்பட்ட கல்வி செல்வம் பற்றி அறிஞர்கள் கருத்து பல.
பெருமைக்குரிய கல்விச் செல்வத்தைப் பற்றி இங்கு காண்போம்.

**கல்வியின் இலக்கணம்**

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றிற்கு இடையூறு ஏற்படும் போது அவற்றை எதிர்த்துப் போரடும் வைராக்கியத்தை கல்வி ஒருவனிடம் ஏற்படுத்த வேண்டும். இதனால் தான் காந்திஜி கூட "ஒழுக்கம் தராத கல்வியை பாவம்' என்று கூறியிருக்கிறார்.
உடல், உள்ளம், ஆன்மா இம்மூன்றின் ஒருமித்த வளர்ச்சிக்கு உதவுவதே கல்வியென காந்தியண்ணல் கூறுகிறார்.
உடலை வளர்ப்பதற்கு பயனுள்ள உடலுழைப்பு வேண்டும். 'உள்ளம் பண்பட சேவை செய்வதற்கான வாய்ப்புகள் தரப்பட வேண்டும். ஆன்மீகத்தை பெருக்க பிரார்த்தனை, பஜனை நாட்டுப்பற்று, மனிதபிமானம் இவை இடம் பெற வேண்டும். இவை அனைத்தும் கல்வியின் இலக்கணங்களாக கொள்ளலாம். இவை அனைத்திற்கும் சந்தர்ப்பம் இல்லாதாதல் தான் மாணவன் சரியான வழயில் முன்னேற்றம் காண முடியவில்லை

**கல்வி வளர்ச்சி**

குருகுலக்கல்வி
திண்ணைப் பள்ளிக்கூடம்.

**குருகுலக் கல்வி**

முந்தைய காலத்தில் குருகுலங்கள் நிறைய இருந்தன. கல்வி கற்க விரும்புபவர்கள் யாராவது ஒரு குருவை அணுகி அவருடைய ஆசிரமத்தில் சேர்ந்து வாழ வேண்டும். குரு இடுகிற வேலைகளை அந்த மாணவன் தொடர்ந்து செய்து வர வேண்டும். குருவுக்கு நேரம் கிடைக்கும்போது மாணவர்களை ஒரு மரநிழலில் அமர வைத்து பேசுவார். அந்த காலத்தில் காகித வசதிகள் கிடையாது. கேள்வி ஞானத்தின் மூலமாகவே அவர்கள் பாடம் கற்பார்கள் குருவின் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லும் மாணவனுக்கு அமிர்தம் போன்றதாகும். ஒரு மாணவன் என்றைக்கு தகுதி பெற்றுள்ளான் என்று குரு நினைக்கிறாரோ அன்று மாணவனைக் கூப்பிட்டு 'நீ பெற வேண்டியதை எல்லாம் பெற்று விட்டால் நீ வீட்டிற்குச் செல்லலாம் என்று கூறி அனுப்பி விடுவார். மாணவன் குருவுக்கு தேவையான ஒன்றை தன்னுடைய வசதிக்கேற்ப குரு தட்சணையாக கொடுத்து ஆசிர்வாதம் பெற்றுச் செல்வான். இக்கல்வி மூலம் பொதுவாக அரச வம்சத்தை சேர்ந்தவர்களும் பிராமணர்கள் மட்டுமே கல்வி கற்று முன்னேற முடிந்தது. மற்றவர்கள் அவரவர்கள் தொழில் செய்வதன் மூலம் தங்களை உயர்த்திக் கொண்டார்கள். இதுவே பண்டைய கல்வி நிலை.

**திண்ணைப்பள்ளிக் கூடங்கள்**

ஆங்கிலேயர்கள் நம்மை அடிமைப்படுத்திய காலத்தில் ஊர்தோறும் திண்ணைப்பள்ளிகூடங்கள் இருந்து வந்தன. தனிப்பட்ட ஒருவர் இவற்றை நடத்தி வருவார். கற்பவர்கள் அவருக்கு பணமோ, பண்டமோ கொடுத்து அரிச்சுவடி மற்றும் பழைய கணக்கு முறைகளைக் கற்று வந்தனர்.

**மெக்காலே கல்வி**

இந்தியர்களை தங்கள் வேலைகளுக்கு வைத்துக் கொண்டால் தான் காரியம் நடக்கும் என்பதை ஆங்கிலேயர் நினைத்தனர். எனவே வில்லியம் பெண்டிங் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது 1835ஆம் ஆண்டில் ஆங்கில கல்வி முறையைக் கொண்டு வந்தார். இக்கல்வி முறையை உருவாக்கிக் கொடுத்தவர் மெக்கலே பிரபு ஆவார். இதன்படி ஆரம்பப்பள்ளிகள்,

உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் என படிப்படியே கல்வி. நிலையங்களை ஆங்கில அரசு நிறுவியது. இவற்றில் ஆங்கிலம் படித்து தேறினால் சர்க்காரில் குமாஸ்தா வேலை கிடைக்கும் என்று அறிவித்தனர். முதலில் தயங்கிய மக்கள் அரசில் பணியாற்றினால் தன் மாதச்சம்பளம் மற்றும் சில சலுகைகள் கிடைக்கும் என நினைத்து இப்பள்ளிகளில் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைத்தனர். இவ்வாறாக ஆங்கிலம் படித்த கூட்டம் பெருகலாயிற்று இது மட்டுமல்லாமல் ஆங்கில பழக்கவழக்கங்கள் கடைபிடிக்க ஆரம்பித்தனர். ஆங்கில ஆட்சிக்கு உறுதுணையாக மாறிவிட்டனர்.

**மெக்காலே பிரபு ஆங்கிலக் கல்வியைப் புகுத்தும் போது கூறிய வாக்கியங்கள்**

ஆங்கிலத்தில் படிக்கும் இந்தியர்கள் இருப்பார்கள். அவர்கள் எண்ணங்களிலும் பழக்க வழக்கங்களிலும் ஆங்கிலேயர்களைப் பின்பற்றியவர்கள் என்று கூறியதை உண்மையாக்கினர். மெக்காலே இந்நாட்டை விட்டுச் சென்று பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆங்கில ஆட்சியும் ஒழிந்தது. மெக்காலே கல்வி மட்டும் ஆணித்தரமாய் நம் நாட்டில் வேரூன்றி விட்டது. நம்முடைய மக்களின் முழுமையான முன்னேற்றத்திற்கு ஒரு பெரும் தடைக்கல்லாய் விளங்குவது ஆங்கிலக் கல்வியின் மேலுள்ள நமது மோகமும் ஒரு காரணம் என்று கூறினால் மிகையாகது.

**காந்தியடிகள் விரும்பிய சமுதாயம்**

- நம் நாட்டில் ஏற்றதாழ்வு மறைய வேண்டும் பரம்பரைத்திறமைகளை ஊக்குவித்து வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.
- அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். இவற்றின் அடிப்படையில் கிராமங்கள் தோறும் வேலை வாய்ப்புகளைப் பெருக்க வேண்டும்.
- சமுதாயத்திற்கு ஏற்ற கல்வி தான் சுதந்திர இந்தியாவிற்கு வேண்டும் என்பதை உணர்ந்து 1937ஆம் ஆண்டு வார்தா நகரில் தேசியக்கல்வி மாநாடு ஒன்றைக் கூட்டினார். அங்கு நல்லவர்களையும் வல்லவர்களையும் கொண்டு இந்தியாவின் கல்வித்திட்டத்தை உருவாக்கினார்.

அதை 'ஆதாரக்கல்வி' என்று அழைத்தனர்.

**ஆதாரக்கல்வியின் நோக்கம்**

ஆதாரக் கல்வியை அடிகள் 'நான் இந்தியாவிற்கு அளித்த மிகப்பெரிய நன்கொடை' என்று வர்ணித்துள்ளார். இது அமைதியான சமுதாய மாற்றத்தை படிப்படியே விளைவிக்கும் வித்து ஆதாரக்கல்வி என்பது மகாத்மாவின் நம்பிக்கை காந்தியடிகள் நினைத்த ஆதாரக்கல்வியை முழுமையாகச் சோதனை செய்து பார்த்திருந்தால் அது உலகிற்கே கல்வித்துறையில் ஒரு வழிகாட்டியாகவும் அமைந்திருக்கும்.

**காந்தியடிகளின் கல்வித்திட்டம்**

கல்வி கற்பதற்கு கால வரையறை கிடையாது. கருவுற்ற வினாடியிலிருந்து கல்லறை போகும் வரை நாம் கற்றக் கொண்டேயிருக்கிறோம் என்பது காந்தியடிகளின் கல்விக்கொள்கை இதை வாழ்நாள் கல்வி என்று கூறலாம்.எனினும் எந்தெந்த நேரத்தில் நாம் எவ்வாறு கற்கலாம் என்று சில யோசனைகள் கூறியுள்ளார். அதன்படி காந்தியடிகளின் கல்வித்திட்டத்தை ஆறு பெரும் வகைகளாகப்பிரிக்கலாம். அவை

- சமூகக்கல்வி (வயது வந்தோர் கல்வி)
- பூர்வாதாரக்கல்வி (பாலர் கல்வி)
- ஆதாரக்கல்வி (சிறுவர் கட்டான கல்வி)
- உயர்ஆதாரக்கல்வி (இளைஞர் கல்வி)
- கிராமியப்பல்கழைக்கழகம் (வாலிபர் கல்வி)
- வாழ்நாள் கல்வி (நிரந்தர கல்வி) ஆகும்.

**காந்தியடிகள் கனவு கண்ட ஆதாரப்பள்ளி (போதனாமுறையும் தேர்வு முறையும்)**

- காந்தியடிகள் கண்ட ஆதாரப்பள்ளியில் அன்றாடம் திட்டமிட்ட செயல்கள் நடைபெறும். இவற்றில் மாணவர்களும், ஆசிரியர்களும் விரும்பிபங்கேற்பர்.
- ஆசிரியர்கள் இயைபு முறையை முறையாகப் பயன்படுத்தி தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூகவியல்,சமயம், நன்னெறிகள்

போன்றவற்றை மாணவர்கள் கற்க உதவுவர்

- செய்தித்தாள்களில் வரும் கருத்துகள், செய்திகளைக் கொண்டு மாணவர்களின் பொது அறிவு வளர்ச்சிக்கு வித்தடுவர் ஆகவே இவறும் எழுத்து தேர்வுகளை மட்டும் நம்பாது மாணாவர்களின் திறமைகள் கலை உணர்வுகள் இவற்றைக் கருத்தில் கொண்டு அவர்களை மதிப்பிடுவர். தொடர்குறிப்பு ஏடு ஒன்றையும் வைத்திருப்பார். மாணவர்களின் முழுவளர்ச்சி அடிப்படையில் ஒரு வகுப்பிலிருந்து மறுவகுப்பிற்கு அனுப்பப்படுவர்.
- மாணவர்கள் பொது அறிவில் சிறந்து விளங்குவர். நல்ல பழக்க வழக்கங்களும் தேசப்பற்றும் மனிதாபிமானமும் இறையற்றும் கொண்டாவ்களாகத் திகழ்வர் இந்த நிலையை உருவாக்க ஆசிரியிர்களும் கல்வித்துறையினரும் செயலாற்றினால் மிகச் சிறந்த எதிர்காலத்தை மாணவர்களிடம் உருவாக்கலாம்.

**முடிவுரை**

பல ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேயர்கள் தங்களுடைய நலன்களுக்காக ஏற்படுத்திய கல்வி முறையை சுதந்திர இந்தியாவிலும் விடாமல் கடைபிடித்து கொண்டிருப்பது நல்லதல்ல. மாறிவரும் சமூக சூழலுக் கேற்ற ஒரு கல்வி முறையை கண்டு பிடித்து நடைமுறைப்படுத்தினால் மிக நன்றாக இருக்கும். அதற்கு நமது தேசப்பிதா ஏற்கனவே நமக்கு வழிகாட்டிய ஆதாரக்கல்வி முறையைப் பின்பற்றினால் வருங்கால மாணவர் சமுதாயம் நல்ல பண்பாட்டுடன் வாழ வழி ஏற்படலாம்.

சிந்தனை, சொல், செயல் ஆகிய மூன்றாலும் ஒன்றிணைந்த மனிதனால் இவ்வுலகையே ஆட்டிவைக்க முடியும். எதையும் சாதிக்கும் துணிச்சல் அவன் உள்ளத்தில் நிறைந்திருக்கும்.

-சுவாமி விவேகானந்தர்

## சிந்தனைக்குச் சில

பிறர் குற்றம் பேசாதவரே பெரியோர்,

கோபம் அன்பை அழிக்கிறது.

மகிழ்ச்சியும் உழைப்பும் வாழ்நாளை வளர்ப்பவை

அடக்கம் மனிதனை தேவனாக்கும்.

ஆணவம் மனிதனைத் தேவத் தன்மையிலிருந்து

நீக்கி அசுரனாக்கும்

கோபத்தை விட்டவனுக்கு எந்நாளும் துன்பமில்லை.

பேராசையை விட்டவனுக்கு பேரின்பம்.

செல்வம் என்பது சிந்தனையின் நிறைவே ஆகும்.

ஆடம்பரம் என்பது நாமே தேடிக்கொள்ளும் வறுமை ஆகும்.

பணிவு என்ற பண்பு தான் நம் வாழ்க்கையின்

உயிர்நாடி

தேவைகள் குறையும் அளவிற்கு தெய்வத்தன்மை

நம்மை வந்தடையும்

தீய மனிதர்கள் அச்சத்தினால் அடங்கி

நடக்கின்றார்கள்.

நல்ல மனிதர்கள் அன்பினால் அடங்கி

நடக்கின்றார்கள்.

ஒவ்வொரு நல்ல எண்ணமும் நல்ல செயலும்

நம் முகத்தில் ஒளியை தருகிறது..

உலகம் திருத்த வேண்டும் என்று பேசும் நாம்,

நாம் திருந்த வேண்டும் என்று நினைப்பதில்லை.

இது தான் உலகம்.



13.06.2015 அன்று ஆசிரம நிறுவனர் அவர்களின் நினைவு நாளில் நிறுவனரின் நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தும் பள்ளி குழந்தைகள்

# காந்திநிகேதன் ஆசிரம வைர விழா ஆண்டு சிறப்புத் துளிகள்



ஆசிரம நிறுவனர் அவர்களின் 106 வது பிறந்த தினம் மற்றும் ஆசிரம வைரவிழா ஆண்டினையொட்டி உசிலம்பட்டி கல்வி மாவட்ட அளவிலான பள்ளிகளுக்கிடையே அறிவியல் கண்காட்சி, கட்டுரை, பேச்சு, இசை, கவிதை, தனித்திறன், விளையாட்டு மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்கள் என பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.



வைர விழா ஆண்டில் எமது பள்ளி பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் மேற்படிப்பிற்கான வேலைவாய்ப்பு மற்றும் கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சி அவர்களின் பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டது.




ஆசிரம நிறுவனர் அவர்களின் 106 வது பிறந்த தினம் மற்றும் ஆசிரம வைரவிழா ஆண்டின் துவக்க விழாவின் பிரார்த்தனையின்போது எடுத்த படம்



புது வாழ்வு திட்டத்தின் கீழ் நமது ஆசிரமத்தில் அருகிலுள்ள கிராமங்களைச் சார்ந்த சுமார்...... பெண்களுக்கு தையல் பயிற்சி நடத்தப்பட்டது. இந்த ஆண்டில் வெற்றிகரமாக பயிற்சி முடித்த பயிற்சியாளர்களுக்கு புது வாழ்வு திட்ட அலுவலர் மேற்கொண்டு அவர்களுக்கான ஆலோசனை வழங்கியபோது எடுத்த படம்.

அறிவு உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்னும் போராட்டம் எழுந்துவிட்டால் உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்ற வேண்டும்.

ஒழுக்கம் இல்லாத வாழ்வு வாழ்வல்ல, ஒழுக்கத்தை போதிக்காத கல்வியும் கல்வியல்ல.

**-திரு.வி.க**

## உங்கள் சிந்தனைக்கு

- ✔ எழுந்தவுடன் குடிக்கும் தண்ணீர் பல நோய்களை விரட்டும்
- ✔ காலை காபி – வியாதிகளின் நண்பன்
- ✔ மலச் சிக்கலே – நலச்சிக்கலின் மூலக்கூறு
- ✔ கழிவின் தேக்கம் - அழிவின் துவக்கம்
- ✔ பசிக்காமல் புசிந்த உணவு - நஞ்சிற்கு சமம்
- ✔ கனிந்த கனிகள் - பணிகளை நீக்கும்
- ✔ தேங்காயம் பழங்களுமே மனித உணவுகள்
- ✔ பால் உணவு - சளியை வளர்க்கும்
- ✔ வெள்ளைச் சீனி – உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும்
- ✔ உப்பு - ஒரு தப்பான உணவு பொருள்

### நீண்ட கால பூக்கள்

சில வகை பூக்கள் பல ஆண்டுகளுக்கு ஒரு முறையே பூக்கும். அவற்றில் சில

7 ஆண்டுகளுக்கு ஒரு முறை – பிரம்ம கமலப்பூ

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை-குறிஞ்சி பூ

100 ஆண்டுகளுக்கு ஒரு முறை – தாழிப்பனை

உலகில்மிகப்பெரிய பூ - ராப்லிஷியா

- ➢ மறைந்த இந்திய பிரதமர் நேருவின் வாழ்வில் 28 என்ற எண் முக்கியத்துவம் பெற்றிருந்தது.
- ➢ நேரு பிறந்த போது அவர் தந்தை மோதிலால் நேருவின் வயது 28
- ➢ இந்திரா காந்தி பிறந்த போது நேருவின் வயது 28
- ➢ நேருவின் மனைவி கமலா இருந்தது பிப்ரவரி 28
- ➢ தன் மனைவி கமலா இறந்த பிறகு நேரு வாழ்ந்த ஆண்டுகள் 28
  - ➢ நேரு மறைந்த பின் அவரது உடல் தகனம் செய்யப்பட்ட நாள் மே – 28




## வாகனப் பயன்பாட்டை குறைப்போம்

**ஆர். சீதாலட்சுமி ஆசிரியை**

### வாக்கிங் போவோம்

நடை என்பது முன்பு வாழ்க்கையோடு சேர்ந்து இருந்தது. இன்று நடையை ஒரு பயிற்சியாக செய்ய வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். நடைப்பயிற்சி செய்வதன் மூலம் நம் உடலும், மனமும் நல்ல ஆரோக்கிய நலையை அடைகிறது.

நடைப்பயிற்சி மேற்கொள்ளும் போது நமது வலது பக்க மூளையும், இடது பக்க மூளையும் சரிவர இயங்குகிறது. புத்துணர்வு ஏற்படுகிறது.



### நன்மைகள்

உபகரணங்கள் தேவையில்லை.

சுறுசுறுப்பாய் இருக்கலாம்

மனஇறுக்கத்தையும், நடுக்கத்தையும் குறைக்கும்

உடலின் எடை சீராக இருக்கும்

கேன்சர் செல்கள் வளர்வதை தடுக்கலாம்

நல்ல மனநிலையை கொடுக்கும்

எலும்புகளின் சக்தியை அதிகரிக்கும்

சர்க்கரையின் அளவு கட்டுப்படும்

மாரடைப்பு வராது

தசைகளின் வளர்ச்சி மற்றும் செயல்களை மேம்படுத்தும்

பக்கத்தில் உள்ள கடைகளுக்கு வாகனத்தில் செல்லாமல் நடந்து செல்லலாம். எரிபொருளை சிக்கனம் செய்யலாம் நம் உடலும் நலமாக இருக்கும்

மனித வளம் சுற்றுப்புறத்தை வளப்படுத்தலாம்.

நம் உடல் மற்றும் மனம் உறுதியாக இருக்க நடைப்பயிற்சி மேற்கொள்வோம்.

ஆரோக்கியமாக இருப்போம்.

# தேடு

வித்யா
ஆசிரியர் பயிற்சி மாணவி



அப்துல்காலம் தேடு
அன்பில் அமைதியைத்தேடு
இளமையில் கல்வியைத் தேடு
ஒற்றுமையில் பலத்தைத் தேடு
கோபத்தில் பொறுமையைத் தேடு
பயணத்தில் விவேகத்தை தேடு
சிந்தனையில் அறிவைத் தேடு
சிரிப்பில் ஆரோக்கியத்தை தேடு
தோல்வியில் முயற்சியைத் தேடு
நட்பில் நம்பிக்கையைத் தேடு
வேதனையில் உறுதியைத் தேடு
வாழ்க்கையில நீ அப்துல் கலாமைத் தேடு

## லட்சத்தீவு

லட்சத்தீவுக் கூட்டத்தில் மொத்தம் 21 தீவுகளே உள்ளன. ஆனால் இதற்கு எதற்காக லட்சத்தீவு என்று பெயர் வைத்தார்கள் என்று எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?




இதோ அதற்கான விடை…..

18-ம் நூற்றாண்டில் கிழங்கிந்திய கம்பெனியினர் ஒருவருக்கு இந்தத் தீவுகளை லட்சம் ரூபாய்க்கு விற்றனர். ஆதனால் இதற்கு லட்சத்தீவு என்ற பெயர் வந்தது.

# அழியாத இன்பம்

தனக்காக இன்பம் விழம்புவதால், அழியும் சுகமே கிடைக்கும். பிறருக்காக இன்பத்தைத் தேடுவதால் அழியா இன்பம் பெறலாம். அழியும் இன்பத்தில் ஈடுபடுபவரை அழியா இன்பம் பெற இயலாது.

**மேன்மை**

நல்ல நோக்கமே மனிதனுக்குப் புகழ்தருவது. எந்த ஒரு நோக்கமும் இல்லாதவன் மனிதன் என்று கூறவே தகுதியற்றவன். புத்தியைப் பின்பற்றி மனமும் மனத்தின் வழியே புலன்களும் சென்றால் உயர்வு ஏற்படும் ஆனால் புலன்கள் வழியே மனமும் மனத்தின் வழியே புத்தியும் அமைந்தால் தாழ்வுதான்.

**கடமை**

தனது கடமையைச் செவ்வனே நிறைவேற்றும் மனிதன் தன் இதயத்தில் இயல்பான நிறைவைப் பெறுகிறான். மாறாகத் தனது கடமையை ஆற்றாத மனிதனின் மனம் இயல்பாகவே கவலைக்கு இடமளிக்கிறது.

கடமைகளில் எதுவும் சிறிதோ, பெரிதோ அல்ல, மிகச் சிறிதாகிலும் சரி, மிகப் பெரியதாகிலும் சரி, கடமை என்று கருத்தில் கொண்டு செயல்பட்டால் அவை எல்லாமே ஒன்று தான்.

**கர்மம் - முன்வினை**

‘செய்வது’ என்பது ஒன்று ‘நிகழ்வது’ என்பது ஒன்று இரண்டின் நடைமுறையும் மாறுபட்டவை. ‘செய்வது’ என்பது மனித முயற்சி காரணமாக ஏற்படுவது, ‘நிகழ்வது’ என்பது முன்வினை காரணமாக ஏற்படுவது ஆகவே மனிதன் ‘செய்வது’ என்பதில் சுதந்திரமுள்ளவன் ‘நிகழ்வது’ என்பது அவன் கையில் இல்லை.

**ஆத்மா**

நமது இருப்பு உடலைச் சார்ந்ததன்று மாறாக உடலின் இருப்பு நம்மைச் சார்ந்தது. அதாவது நாம் உடலின்றி இருக்கலாம், ஆனால் உடல் நாம் (ஆத்மா) இன்றி இருக்க முடியாது.

கண்களைக் காட்டிலும் மனத்திற்கு நினைவாற்றல் அதிகம். மனத்தைக் காட்டிலும் புத்திக்கு நினைவாற்றல்

அதிகம் அதைக் காட்டிலும் ஆற்றல் மிக்கது 'ஆத்மா' அது எதை பற்றுகிறதோ அதைக் தினத்தோறும் நினைவு கொள்கிறது.

பசுவின் உடலில் உள்ள பாலால் (கறப்பதற்கு முன்) பயனில்லை. அதுபோன்று கற்றுக் கொண்ட அறிவினாலும் பயனில்லை. (பட்டறிவு அனுபவ அறிவே உயர்ந்தது)

பிறர் மகிழ்ச்சியுடன் தரும் பொருள் பாலுக்கு நிகரானது பிறரிடம் கேட்டுப் பெறம் பொருள் நீருக்கு நிகர். பிறரை வருத்திப் பெரும் பொருள் இரத்ததிற்க்கு நிகரானது.

******

## தேசிய ஒருமைப் பாட்டுப் பண்டிகை

பண்டிகைகள் மக்களின் பண்பாட்டின் அங்கமாக விளங்குகிறது. இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகள் பல இவற்றுள் 'தீபாவளிப் பண்டிகை' மட்டும் தான். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை எல்லோரும் கொண்டாடி மகிழ்கிறார்கள். எனவே தீபாவளிப் பண்டிகையை 'தேசிய ஒருமைப் பாட்டுப் பண்டிகை' எனப் பெரியோர்கள் ''கூறுகிறார்கள்.

**தீபாவளி கொண்டாடிய முகமதிய மன்னன்**

தீபாவளி என்பதற்கு தீபங்களின் வரிசை எனப் பொருள். இது ஐஸ்வர்ய தேவதையான லட்சுமியை வழிபடும் பண்டிகை ஆகும். தீபாவளி குறிப்பாக சூரியனுடைய போக்கில் உண்டாகும். ஒரு மாறுதலை காட்டும். சூரியன் அன்று துலாம் ராசியில் பிரவேசிக்கிறார். தீபாவளி அன்று பட்டாசு வெடிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தியவர் முதல் முகலாய சக்ரவர்த்தியான அக்பர் தீபாவளி பண்டிகையை கொண்டாடியதாகத் தெரிகிறது.

**நரகாசுரன்**

நரகாசுரன் ஆண்டதாகச் சொல்லப்படும் 'பிராக்ஜோதிஷபுரம்' தந்போதைய அசாம் மாநிலத்தில் உள்ளது. நரகாசுரனுடைய சேனாதிபதியான 'முரன்' என்பவனை வதைத்ததாலேயே கண்ணனுக்கு 'முராரி' என்று பெயர் வந்தது.

**பர்யூசன் பர்வா**

ஜெயின் மதத்தில் தீபாவளிக்கு எட்டு தினங்களுக்கு முன்பு உண்ணாவிரதம் கடைப்பிக்கின்றனர். இதை 'பர்யூசன் பர்வா' என்று அழைக்கின்றனர். இந்த விரதத்தின் போது ஓர் அமைதியான இடத்தில் அமர்ந்து தியானம் செய்வர் அந்த எட்டு தினங்கள் காய்கறி உணவைத் தவர்த்து வெறும் சுடுதண்ணீர் மட்டுமே அருந்துவர். இந்த எட்டுதினங்களில் தான் ஜெயின் மதத்திலுள்ள எல்ல வயதினரும் ஒன்று சேர ஜெயின் கோயில்களுக்குச் சொன்று 'கல்பசூத்ரா' படிக்கச் சொல்லிக் கேட்பர்.

**தீபாவளி அன்று சொர்ண அன்ன பூரண தரிசனம்**

காசியிலுள்ள புராதான சக்தி கோயிலில் மூலவர் 'சொர்ணராணி' யின் முழு திரு உருவத்தையும் (தங்க உருவம்) தீபாவளியன்று மட்டும் தான் தரிசிக்க முடியும். வருடத்தில் மற்ற நாட்களில் சாளரத்தின் மூலம் சொர்ண அன்ன பூரணியின் முகத்தை மட்டுமே தரிசிக்க முடியும்.

...............

## சிறையில் பூத்த சிறந்த நூற்பூக்கள்

சிறைவாசம் சென்ற தலைவர்கள் அதை தண்டனையாக கருதாமல் ஒரு வாய்ப்பாக்கி சாதனையும் புரிந்தனர்.

- ஆங்கில அரசு, பூனாவிலுள்ள எரவாடா சிறையில் காந்தியை அடைத்தனர். தன் வாழ்க்கை வரலரான 'சத்திய சோதனை'யின் பெரும் பகுதியை காந்தி அங்குதான் எழுதி முடித்தார்.
- நேரு சிறையில் இருந்தபோது மகளுக்கு தந்தையின் கடிதங்கள் தன் சுயசரிதை உட்பட பல நூல்களை எழுதினார்.
- பாலகங்காதரர் திலகரை பர்மாவின் மாண்டலே சிறையில் அடைத்த போது. 'கீரை ரகசியம்' என்ற நூலை இயற்றினார்.
- சுதந்திர போரட்ட வீரர் பட்டாபி சீத்தாராமையாவை வேலூர் சிறையில் அடைத்த போது இந்திய தேசிய காங்கிரசின் வரலாறு என்று நூலை படைத்தார்.
- ஜெயபிராகாஷ் நாராயணன் சிறையில்

எழுதிய நூல் ஜப்பானிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.

- லால்பகதூர் சாஸ்திரி, ராஜாஜி, ராஜேந்திர பிரசாத், அபுல் கலாம் ஆசாத், வினோபா போன்ற பலரும் சிறையில் இருந்தபோது சிறந்த நூல்களை எழுதி சாதனை புரிந்தனர்.

## அதிசயத்தின் அதிசயம்

எஸ்.கௌசல்யா ஆசிரியர்

- அன்னாச்சிபழத்திற்கும் விதைகள் இல்லை.
- அத்தி, பலா மரங்கள் பூப்பத இல்லை.
- அரேபியாவில் ஆறுகள் இல்லை.
- அண்டார்டிக்காவில் மரங்கள் இல்லை.
- இந்தியாவில் எரிமலைகள் இல்லை.
- உத்திரப்பிரதேசத்தில் தென்னை மரங்கள் இல்லை.
- ஜோர்டான் நதியில் மீன்கள் இல்லை.
- சிங்கப்பூரில் காக்கைகள் இல்லை.
- ஹவாய்த்தீவில் பாம்புகள் இல்லை.
- நேபாளத்தில் பகலில் மழை பெய்வது இல்லை.
- காந்தியடிகள் விமானத்தில் பயணம் செய்தது இல்லை.
- பறவைகளுக்கு வியர்வை சுரபிகள் இல்லை.
- மலைப்பாம்புகளுக்கு இறக்கை இல்லை
- ‘சிவி’ என்ற பறவைக்கு இறக்கை இல்லை.
- சிங்கமும், புலியும் ஒரே காட்டில் வாழ்வது இல்லை.
- கடலில் முதலைகள் இருப்பது இல்லை.
- யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை.
- நட்சத்திர மீனுக்கு மூளை இல்லை.
- நண்டுக்கு தலை இல்லை.
- வண்ணத்துப்பூச்சிக்கு வாய் இல்லை.



மதுரை டி.வி.எஸ் மெட்ரிக் பள்ளியை சார்ந்த மாணவ,மாணவியருக்கு எண்டகன் நிறுவனத்தின் மூலம் நமது ஆசிரம வளாகத்தில் வாழ்க்கை நியதிக்கான வாழ்க்கை நெறி வழிகாட்டல் (Valuetainment Programme) வகுப்புகள் பல்வேறு கட்டங்களில் வழங்கப்பட்டது.





ஆரம்பபள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு விழா நடத்தப்பட்டது. இதில் பூர்வாதாரம் முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான பல மாணவ. மாணவிகள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டனர்.

## மாவட்டங்களும் அடைமொழிகளும்

1. சென்னை - தென்னிந்தியாவின் நுழைவாயில்
2. காஞ்சிபுரம் - ஆலய நகரம், புனித பூமி
3. கோவை - தென்னிந்தியாவின் மான்செஸ்டர்
4. திருச்சி - மலைக்கோட்டை நகரம்
5. சேலம் - மாம்பழ நகரம்
6. நீலகிரி - மலைகளின் ராணி
7. தூத்துக்குடி - முத்து நகரம், துறைமுக நகரம்
8. நெல்லை - தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு
9. கன்னியாகுமரி- இந்தியாவின் தென் நில எல்லை
10. தேனி - இயற்கை விரும்பிகளின் பூமி
11. மதுரை - உறங்கா நகரம்
12. கரூர் - நெசவாளர்களின் வீடு
13. ஈரோடு - வாணிப மையம்
14. விருதுநகர் - தொழில் நகரம்
15. சிவகங்கை - சரித்திரம் உறையும் பூமி

## நதியே ! நதியே !

இந்தியாவின் 'சிவப்பு நதி' – பிரம்ம புத்தரா

'ஒரிசாவின் துயரம்' என அழைக்கப்படுவது – மகாநதி

'கோவாவின் உயிர்நாடி' என சிறப்பித்து

பேசப்படும் நதி – மண்டோவி

இந்தியாவின் தனியார் மயமாக்கப்பட்ட

முதல் நதி - ஷியோநாத்

பாகீரதியும், அலக்நந்தாவும் ஒன்று கலந்து

கங்கையாக உருமாறும் இடம் - தேவப்ரயாக




**இந்த நூற்றாண்டின் மாபெரும் மனிதர் மேதகு முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் இழப்பு உலக மக்கள் அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தியது.**

## ஸ்மார்ட் கிளாஸ்

மாறி வரும் காலச்சூழலுக்கேற்ப, சிறுவயது முதலே ஏட்டுக்கல்வி மட்டுமல்லாது வாழ்க்கைக்கு உதவும் ஒரு மாறுபட்ட ஒரு வகுப்பறைச் சூழலை நமது ஆரம்பப் பள்ளி மாணவர்கள் பெற்றிடும் நோக்கத்தோடு நம் ஆரம்பப்பள்ளியில் Smart Class



27.01.2016 மதுரை மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் (DEEO) திருமதி இராஜாமணி அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள், மேலும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் திரு வடிவேல் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள்.

இதற்காக தனிப்பட்ட வகுப்பறைகள் மற்றும் திறன்களை வளர்க்கும் சிறந்த செயல்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இச் செயல்பாடுகளை மாணவர்கள் தனித்தோ, குழுவாகவோ செய்யலாம். தேவை ஏற்படின் ஆசிரியர் வழிகாட்டுவதாக இருக்கும் மேலும் இவ்வகுப்பறையில் கற்றலை மேம்படுத்திட வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பங்களும் நமது மண்ணின் பாரம்பரிய கல்வி தொழில்நுட்பங்களும், உத்திகளும், நுணுக்கங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## நல்ல ஆசிரியரின் பண்புகள்

ஒரு ஆசிரியர் குழந்தைக்கு கற்றுத்தர வேண்டுமானால்....

- ஆசிரியர் குழந்தைகளை நேசிக்க வேண்டும்.
- ஒவ்வொரு குழந்தையின் இதயத்திற்கும் ஆசிரியர் வழி கண்டுபிடிக்கவேண்டும்
- குழந்தையின் நெருக்கத்தை ஆசிரியர் உணரவேண்டும்.
- குழந்தையின் குதூகலத்தையும் வருத்தத்தையும் ஆசிரியர் அனுபவிக்கவேண்டும்.
- குழந்தையின் இடத்தில் ஆசிரியர் தன்னை வைத்துப் பார்க்கவேண்டும்.
- தானும் ஒரு குழந்தையாக இருந்து இருக்கிறோம். என்பதை ஆசிரியர் மறக்கக்கூடாது.

‡ரஷ்யா எழுத்தாளர். வசீலிசுகம்வீனஸ்கி

குரல் ஒலிக்கும்...,